Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 498 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | மணிகண்டன் | Calling: | ஓட்டுநர் |
| Father's / Husband's Name: | வெங்கடேசன் | Religion: | |
| Village: | காகங்கரை | Age: | 34 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 10.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 2 முதன்மை விசாரணை

நான் காகங்கரையில் வசித்து ஓட்டுநராக பணியாற்றி வருகிறேன். கடந்த 13.12.2023ம் தேதி காலை 05.30 மணிக்கு புத்துக்கோவில் அருகே நான் சென்னைக்கு லோடு ஏற்றிச்செல்லும்போது டீ குடிப்பதற்காக அங்கு எனது வாகனத்தை நிறுத்திவிட்டு டீ குடித்துக்கொண்டிருந்தேன். அப்போது அங்கு அங்கு நின்றுகொண்டிருந்த ஒரு அரசு பேருந்து நகரும்போது முன்படிக்கட்டில் நடத்துனர் நின்று கொண்டிருந்தபோது அவரை இடித்து தள்ளியதால் நடத்துனர் கீழே விழுந்தார். அதில் அவர் கால் மீது அதே பேருந்தின் சக்கரம் ஏறி இறங்கியது. அதில் நடத்துனரின் கணுக்கால் நசுங்கியது. அங்கிருந்த நபர்கள் கூச்சல்போட்டதால் பேருந்தின் ஓட்டுநர் பேருந்தை நிறுத்தினார். அந்த ஓட்டுநரை தற்போது பார்த்தால் என்னால் அடையாளம் கூற இயலும். ஆஜர் எதிரி தான் அந்த நபர். பின் ஆம்புலன்ஸ் வரவழைத்து நடத்துனரை மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

நான் சம்பவத்தின்போது டீகடையில் டீ குடித்துகொண்டிருந்தேன் என்றால் சரிதான். ஜனங்கள் விபத்து ஏற்பட்டுவிட்டது என கத்தியபோது நான் வந்து பார்த்தேன் என்றால் விபத்து ஏற்பட்டதையே பார்த்தேன். நான் எனது முதன்மை விசாரணையில் கூறியவாறு நடத்துனர் படிக்கட்டு அருகில் நின்று கொண்டிருந்தபோது வண்டி மோதி விபத்து ஏற்பட்டதாக நான் கூறியிருந்தால் அது சரிதான். நடத்துனர் இடது கால் மீது தான் வண்டி ஏறி காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், விபத்து பற்றிஎதுவும் தெரியாது என்றாலும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) மணிகண்டன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 498 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.3**

| | | | |
|---|---|---|---|
| Name: | கமலக்கண்ணன் | Calling: | கூலி |
| Father's / Husband's Name: | காளியப்பன் | Religion: | |
| Village: | காகங்கரை | Age: | 42 |
| Taluk: | திருப்பத்தூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 10.07.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 3 முதன்மை விசாரணை

நான் காகங்கரையில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் அடிப்பட்ட வெங்கடேசன் எனது அக்காவின் கணவர் ஆவார். கடந்த 13.12.2023ம் தேதி 05.30 மணிக்கு எனது அக்கா மகன் அஜித்குமார் எனது மாமாவிற்கு புத்துக்கோவில் அருகே எனது அப்பா வழக்கம் போல் டியூட்டிக்கு சென்றபோது அவர் நடத்துனராக வேலை பார்த்த அதே பேருந்தில் விபத்து ஏற்பட்டு காலில் காயம் ஏற்பட்டிருப்பதாக தகவல் சொன்னார். தகவல் தெரிந்து நான் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். அவருக்கு வலது காலில் எனது மாமாவிற்க்கு அடிப்பட்டிருந்தது. அவரை மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். போலிசார் அங்கு என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

விபத்தானது எப்படி, எதனால் ஏற்பட்டது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலிசார் கோயம்புத்தூர் மருத்துவமனைக்கு வந்தபோது எனது மாமா மயக்க நிலையில் இருந்ததால் எனது அக்காவிடம் தான் புகார்வாக்குமூலம் வாங்கி சென்றார்கள் என்றால் சரிதான். அதன்பின் எனது மாமா மருத்துவமனையிலிருந்து டிஸ்ஜார்ஜ் ஆகியபின் அம்பலூர் காவல் நிலையத்திலிருந்து எனது அக்காவிடம் விசாரிக்க வந்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு விபத்து பற்றி எதுவும் தெரியாது என்றாலும், அடிப்பட்டது எனது மாமாவிற்க்கு என்பதால் இவ்வழக்கில் நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) கமலக்கண்ணன்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K